**12** - ஆம் வகுப்பு

Time : 1.30 Hrs

# அரையாண்டுத் தேர்வு – 2023 - 2024

## பொருளியல் (ஒரு மதிப்பெண்கள்)

மொத்த மதிப்பெண்கள் : 100

100 X 1 = 100

**சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :**

1. "நவீன பேரியல் பொருளியலின் தந்தை" என அழைக்கப்படுபவர் யார்?
(அ) ஆடம் ஸ்மித் (ஆ) ஜே.எம். கீன்ஸ் (இ) ராக்னர் பிரிக்ஸ் (ஈ) காரல் மார்க்ஸ்
2. பேரியல் பொருளாதாரம் என்பது பற்றிய படிப்பு
(அ) தனிநபர்கள் (ஆ) நிறுவனங்கள் (இ) நாடு (ஈ) மொத்தங்கள்
3. ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை பொருளாதார நடவடிக்கைகளை குறிப்பிடுக.
(அ) உற்பத்தி மற்றும் பகிர்வும் (ஆ) உற்பத்தி மற்றும் பரிமாற்றம்
(இ) உற்பத்தி மற்றும் நுகர்வு (ஈ) உற்பத்தி மற்றும் சந்தையிடுகை
4. எந்த பொருளாதார அமைப்பில், உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது?
(அ) முதலாளித்துவ அமைப்பு (ஆ) சமத்துவ அமைப்பு
(இ) உலகமய அமைப்பு (ஈ) கலப்பு பொருளாதார அமைப்பு
5. பகிர்வில் சமத்துவத்தை கடைபிடிக்கிற பொர்ருளாதார அமைப்பு ............ ஆகும்.
(அ) முதலாளித்துவ அமைப்பு (ஆ) உலகமயத்துவ அமைப்பு
(இ) கலப்பு பொருளாதார அமைப்பு (ஈ) சமத்துவ பொருளாதார அமைப்பு
6. ஒரு குறிப்பிட்ட காலத்தில் குவிந்த சரக்குகளின் அளவை குறிப்பிடும் பதம் ......... ஆகும்.
(அ) உற்பத்தி (ஆ) இருப்பு (இ) மாறிலி (ஈ) ஓட்டம்
7. திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தின் வட்ட ஓட்ட மாதிரி என்பது .................. ஆகும்.
(அ) இருதுறை மாதிரி (ஆ) முத்துறை மாதிரி
(இ) நான்கு துறை மாதிரி (ஈ) மேல் சொல்லப்பட்ட அனைத்தும்.
8. கீழ்வருவனவற்றுள் தடைபடா ஓட்ட மாறிலியைக் கண்டுபிடி
அ) பண அளிப்பு ஆ) சொத்துகள்
இ வருமானம் ஈ) வெளிநாட்டு செலாவணி இருப்பு
9. முதனமை துறை என்பது
(அ) தொழில் (ஆ) வியாபாரம் (இ) விவசாயம் (ஈ) கட்டடம் கட்டுதல்
10. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது மிகப் பெரிய எண்ணாக இருக்கும்?
(அ) செலவிடக்கூடிய வருமானம் (ஆ) தனிநபர் வருமானம் (இ) NNP (ஈ) GNP
11. மூன்றாம் துறை ...... எனவும் அழைக்கப்படுகிறது.
(அ) பணிகள் (ஆ) வருமானம் (இ) தொழில் (ஈ) உற்பத்தி
12. ஒரு நாட்டின் ...... செயலை தேசிய வருவாய் குறிப்பிடுகிறது.
(அ) தொழில் (ஆ) விவசாயம் (இ) பொருளாதாரம் (ஈ) நுகர்வு
13. இந்தியாவில் நிதி ஆண்டு என்பது .......
(அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 (ஆ) மார்ச் 1 முதல் ஏப்ரல் 30
(இ) மார்ச் 1 முதல் மார்ச் 16 (ஈ) ஜனவரி 1 முதல் டிசம்பர் 31
14. ஒரு நாட்டின் சராசரி வருமானம் என்பது
(அ) தனிநபர் வருமானம் (ஆ) தலைவீத வருமானம்
(இ) பணவீக்க விதம் (ஈ) செலவிடக்கூடிய வருமானம்
15. PQLI என்பது ................. ன் குறியீடு ஆகும்.
(அ) பொருளாதார வளர்ச்சி (ஆ) பொருளாதார நலன்
(இ) பொருளாதார முன்னேற்றம் (ஈ) பொருளாதார மேம்பாடு.
16. மிக அதிக அளவிலான நாட்டு வருமானம் ........ லிருந்து வருகிறது
அ) தனியார் துறை ஆ) உள்துறை
இ) பொதுத்துறை ஈ) எதுவும் இல்லை
17. மறைமுக வேலையின்மையில், உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி
(அ) பூஜ்யம் (ஆ) ஒன்று (இ) இரண்டு (ஈ) நேர்மறை
18. தொன்மை பொருளியல் கோட்பாட்டின் பிரதான இயல்பு ............
(அ) குறைந்த அளவு வேலைவாய்ப்பு (ஆ) பொருளாதாரம் எப்போதும் சமநிலையில் இருக்கும்
(இ) தேவை அதன் அளிப்பை உருவாக்குகிறது (ஈ) நிறை குறை போட்டி
19. கீன்ஸின் கருத்துப்படி முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் எப்படிப்பட்ட வேலையின்மை காணப்படுகிறது?
(அ) முழு வேலைவாய்ப்பு (ஆ) தன் விருப்ப வேலையின்மை
(இ) தன் விருப்பமற்ற வேலையின்மை (ஈ) குறைவு வேலைவாய்ப்பு
20. சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையே சமநிலையை கொண்டு வருவது .......... நெகிழ்வு ஆகும்.
(அ) தேவையின் (ஆ) அளிப்பின் (இ) மூலதனத்தின் (ஈ) வட்டியின்
21. தொகுத் தேவையின் கூறு .................. ஆகும்.
(அ) தனிநபர் சேவை (ஆ) அரசுச் செலவு (இ) ஏற்றுமதி மட்டும் (ஈ) இறக்குமதி மட்டும்
22. மொத்த அளிப்பு சமம் ........
(அ) C + I + G (ஆ) C + S + G + (X – M) (இ) C + S + T + (X – M) (ஈ) C + S + T + Rf



CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

23. தொன்மைக் கோட்பாடு .......... ஐ ஆதரிக்கிறது.
(அ) சமநிலை வரவு செலவு (ஆ) சமமற்ற வரவு செலவு
(இ) உபரி வரவு செலவு (ஈ) பற்றாக்குறை வரவு செலவு

24. அமைப்புசார் வேலையின்மையின் இயல்பு அ) இயங்கா சமுதாயம்
ஆ) சமதர்ம சமுதாயம் இ) இயங்கும் சமுதாயம் ஈ) கலப்பு பொருளாதாரம்

25. இறுதிநிலை நுகர்வு நாட்டம் கூடினால்
(அ) நுகர்வுச் சார்புக்கோடு செங்குத்தை நோக்கிச் செல்லும்
(ஆ) நுகர்வுச் சார்பு மேல் நோக்கி இடம் பெயரும்
(இ) நுகர்வுச் சார்பு கீழ்நோக்கி இடம் பெயரும் (ஈ) சேமிப்புச் சார்பை மேலே தள்ளும்.

26. கீன்ஸன் நுகர்வுச் சார்பு C = 10 + 0.8Y ஆக இருந்து, செலவிடக்கூடிய வருவாய் ரூ. 100 ஆக இருந்தால், சராசரி நுகர்வு நாட்டம் எவ்வளவு?
(அ) ரூ. 0.8 (ஆ) ரூ.800 (இ) ரூ.810 (ஈ) ரூ. 0.9

27. ஒரு குறிப்பிட்ட வருவாய் அளவில், நுகர்வு அதிகரித்தால்
(அ) மொத்த தேவை உயரும் (ஆ) ஏற்றுமதி உயரும்
(இ) வரியின் மூலம் வரும் வருவாய் குறையும் (ஈ) இறக்குமதி செலவு குறையும்

28. இறுதிநிலை நுகர்வு விருப்பு =
(அ) மொத்த செலவு / மொத்த நுகர்வு (ஆ) மொத்த நுகர்வு / மொத்த வருவாய்
(இ) நுகர்வு மாற்றம் / வருவாய் மாற்றம் (ஈ) மேற்காண் ஏதுமில்லை

29. வருவாய் உயர்ந்தால், நுகர்வு
(அ) குறையும் (ஆ) மாறாது (இ) ஏறி இறங்கும் (ஈ) உயரும்

30. மிகைப் பெருக்கி என்ற கருத்தை முதன்முதலில் பயன்படுத்தியவர்
(அ) J.R. ஹிக்ஸ் (ஆ) R.G.D.ஆலன் (இ) கான் (ஈ) கீன்ஸ்

31. MEC என்ற கருத்துருவை அறிமுகப்படுத்தியவர் யார்?
(அ) ஆடம் ஸ்மித் (ஆ) J.M.கீன்ஸ் (இ) ரிக்கார்டோ (ஈ) மால்தஸ்

32. கீழ்கண்டவற்றுள் சரியாக பொருந்தாத ஒன்றை தெரிவு செய்.
(அ) பெருக்கி (K) - $\Delta I / \Delta Y$ (ஆ) MPS - $\Delta S / \Delta Y$ (இ) முடுக்கி (β) - $\Delta I / \Delta C$ (ஈ) APC - C / Y

33. சராசரி நுகர்வு நாட்டம் கணக்கிடப்படுவது அ) C/Y ஆ) CY இ) Y/C ஈ) C + Y

34. காகிதப்பண முறையை மேலாண்மை செய்வது
(அ) மைய பணவியல் அமைப்பு (ஆ) மாநில அரசு (இ) மைய அரசு (ஈ) வங்கிகள்

35. பணவீக்கம் என்பது
(அ) விலைகள் அதிகரிப்பு (ஆ) விலைகள் குறைதல் (இ) பணமதிப்பு அதிகரிப்பு (ஈ) விலைகள் மாறாதிருத்தல

36. தேக்க வீக்கத்தில் பணவீக்க விகிதத்துடன் இணைந்திருப்பது
(அ) தேக்கம் (ஆ) வேலைவாய்ப்பு (இ) உற்பத்தி (ஈ) விலை

37. மந்த காலத்தில் பொருளியல் நடவடிக்கைகள் இவ்வாறு இருக்கும்.
(அ) உயர்ந்த பட்சமாக (ஆ) மிக மோசமாக (இ) மிகக் குறைந்த பட்சமாக (ஈ) மிக நல்ல நிலையில்

38. பற்று அட்டை என்பது ...... உதாரணம் ஆகும்.
(அ) கட்டளைப் பணம் (ஆ) காகிதப் பணம் (இ) நெகிழி பணம் (ஈ) கடன் பணம்

39. MV = PT என்ற சமன்பாட்டில், V என்பது
(அ) வாணிபத்தின் அளவு (ஆ) பணத்தின் சுழற்சி வேகம்
(இ) ரொக்கப் பணத்தின் அளவு (ஈ) வங்கி மற்றும் கடன் பண அளவு

40. "வாங்கும் சக்திக்கான அளவின் அசாதாரண குறைவு நிலையாகும்" என்று கூறியவர்
(அ) கோல்பரின் (ஆ) கிரிகெரி (இ) ரிக்கார்டோ (ஈ) மால்தஸ்

41. பணவீக்கத்தின் பொழுது பயனடைபவர்கள் யார்? அ) கடன் பெற்றோர்கள்
ஆ) கடன் வழங்கியோர் இ) கூலி, சம்பளம் ஆகியன பெறுவோர் ஈ) அரசு

42. வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது
(அ) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா (ஆ) நபார்டு (இ) ICICI (ஈ) இந்திய ரிசர்வ் வங்கி

43. கடைசி நேரத்தில் உதவும் உற்ற நண்பன் என்ற பணியினைச் செய்வது
(அ) மைய வங்கி (ஆ) வணிக வங்கிகள் (இ) நிலவள வங்கிகள் (ஈ) கூட்டுறவு வங்கிகள்

44. ரெப்போ விகிதம் என்பதன் பொருள்
(அ) வணிக வங்கிகள் ரிசர்வ் வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்
(ஆ) ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்
(இ) அந்நிய செலாவணி விகிதம் (ஈ) நாட்டின் வளர்ச்சி விகிதம்

45. நெறிமுறை தூண்டல் என்பது
(அ) உத்தமநிலைப்படுத்தல் (ஆ) உச்சநிலைப்படுத்தல்
(இ) தூண்டுதல் நடவடிக்கை (ஈ) குறைவுநிலைப்படுத்துதல்

46. ஏற்றுமதி - இறக்குமதி வங்கி துவங்கப்பட்டது........
(அ) ஜூன் 1982 (ஆ) ஏப்ரல் 1982 (இ) மே 1982 (ஈ) மார்ச் 1982

47. 2016ல் பணமதிப்பு நீக்கம் எந்தெந்த மதிப்பு பணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது?
(அ) 500 மற்றும் 1000 (ஆ) 1000 மற்றும் 2000
(இ) 200 மற்றும் 500 (ஈ) மேற்சொன்னவை அனைத்தும்

48. RBI எந்த வங்கியாக செயல்படுகிறது?
(அ) இந்திய அரசு (ஆ) சமூகம் (இ) தனியார் நிறுவனம் (ஈ) (அ) மற்றும் (ஆ)

49. வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது
அ) ஸ்டேட், பாங்க் ஆப் இந்தியா ஆ) நபார்டு இ) ICICI ஈ) இந்திய ரிசர்வ் வங்கி

50. புதிய பன்னாட்டு வாணிபக் கோட்பாடு எதன் அடிப்படையில் அமைந்தது?
(அ) முழுமைச் செலவு (ஆ) ஒப்புமைச் செலவு (இ) உற்பத்திக் காரணிக் கோட்பாடு (ஈ) எதுவுமில்லை



CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

51. கீழ்கண்டவர்களில் யார் ஒற்றைக் காரணி வாணிப வீதத்தை வடிவமைத்தவர்?
(அ) ஜேக்கப் வைனர் (ஆ) G.S. டோரன்ஸ் (இ) எப். டபிள்யு டாசிக் (ஈ) ஜே. எஸ். மில்

52. அயல்நாட்டுச் செலுத்துநிலை உள்ளடக்கிய இனங்கள் ........
(அ) புலனாகும் பொருட்கள் மட்டும் (ஆ) புலனாகாத பணிகள் மட்டும்
(இ) அ மற்றும் ஆ (ஈ) பண்ட வாணிபம் மட்டும்

53. சுற்றுலா மற்றும் வெளிநாட்டுப் பயணம் தொடர்புடைய பரிவர்த்தனைகள் அயல்நாட்டு செலுத்துநிலையின் எந்த கணக்கின்கீழ் பதிவாகிறது?
(அ) பொருள் வாணிகக் கணக்கு (ஆ) பணிகள் வாணிகக் கணக்கு
(இ) பணபரிவர்த்தனை கணக்கு (ஈ) மூலதனக் கணக்கு

54. சுழற்சி அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமற்ற நிலைக்கான காரணம்
(அ) வாணிக சுழற்சியின் மாறுபட்ட காலகட்டம்
(ஆ) வருவாய் மற்றும் விலை தேவை நெகிழ்ச்சி நாடுகளுக்கிடையே வேறுபடுதல்
(இ) நீண்டகால பொருளாதார மாற்றங்கள் (ஈ) அ மற்றும் ஆ

55. இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை எது?
(அ) வங்கி (ஆ) அணு ஆற்றல் (இ) மருந்து உற்பத்தி (ஈ) காப்பீடு

56. அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலைக் கூறுகள் கீழ்க்காண்பவற்றில் எவை அ) நடப்பு கணக்கு
ஆ) மைய வங்கி இருப்பு இ) மூலதன கணக்கு ஈ) அ, ஆ, இ மூன்றும்

57. பன்னாட்டு பண நிதியம் கீழ்க்கண்ட இந்த மாநாட்டில் உருவாக்கப்பட்டது
(அ) பாண்டுங் மாநாடு (ஆ) சிங்கப்பூர் மாநாடு (இ) பிரிட்டன்வுட்ஸ் மாநாடு (ஈ) தோஹா மாநாடு

58. ஐபிஆர்டி இவ்வாறாகவும் அழைக்கப்படுகிறது
(அ) பன்னாட்டு பணநிதியம் (ஆ) உலக வங்கி (இ) ஆசியான் (ஈ) பன்னாட்டு நிதிகழகம்

59. சிறப்பு எடுப்பு உரிமையின் மற்றொரு பெயர்
(அ) தாள் தங்கம் (ஆ) பங்களவுகள் (இ) தன் விருப்ப ஏற்றுமதி தடைகள் (ஈ) இவை ஏதுமில்லை

60. கீழ்க்கண்டவைகளில் எது SARRC உறுப்பினர் நாடு அல்ல?
(அ) பாகிஸ்தான் (ஆ) ஸ்ரீலங்கா (இ) பூடான் (ஈ) சீனா

61. பிரிக் (BRIC) என்ற சுருக்கச்சொல் கோர்க்கப்பட்ட ஆண்டு
(அ) 2001 (ஆ) 2005 (இ) 2008 (ஈ) 2010

62. ஆசியான் விவாதத்தில் பங்கெடுக்கும் ஆறு நாடுகளில் சேராத நாடு
(அ) சீனா (ஆ) ஜப்பான் (இ) இந்தியா (ஈ) வடகொரியா

63. பெனிலக்ஸ் (BENELUX) என்பது இதன் வடிவமாகும்.
(அ) தடையற்ற வர்த்தகப் பகுதி (ஆ) பொருளாதார ஒன்றியம்
(இ) பொது சந்தை (ஈ) சுங்கவரி ஒன்றியம்.

64. ஆசியான் அமைப்பின், தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்
அ) ஜகார்த்தா ஆ) புதுடெல்லி இ) கொழும்பு ஈ) டோக்கியோ

65 ஆடம் ஸ்மித்தால் கூறப்படாத புனித வரிவிதிப்பு விதி எது?
(அ) சமத்துவ விதி (ஆ) நிச்சயத்தன்மை விதி (இ) வசதி விதி (ஈ) எளிமை விதி

66. இந்த நன்மையை நேர்முக வரி கொண்டிருக்கவில்லை
(அ) சமத்துவம் (ஆ) வசதி (இ) நிச்சயத்தன்மை (ஈ) நாட்டுப் பற்று

67. அரசின் வருவாய் வரவு (Revenue Receipts) கணக்கில் சேராதது ..........
(அ) வட்டி (ஆ) இலாபம். மற்றும் இலாப ஈவு
(இ) கடன்களை திரும்பப் பெறுதல் (ஈ) சொத்திலிருந்து கிடைக்கிற வாரம்

68. பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் என்பதன் பொருளாவது
(அ) அரசின் செலவைவிட அரசின் வருவாய் அதிகம்
(ஆ) அரசின் நடப்புக்கணக்குச் செலவு நடப்புக்கணக்கு வருவாயைவிட அதிகம்
(இ) அரசின் மொத்தச் செலவு மொத்த வருவாயைவிட அதிகம் (ஈ) மேலே கூறியவற்றில் எதுவும் இல்லை

69. பொதுக்கடனை மாற்றுதல் என்பது
(அ) பழைய கடன் பத்திரங்களுக்குப் பதிலாக புதிய கடன் பத்திரங்களை மாற்றுதல்
(ஆ) அதிக வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களுக்குப் பதிலாக குறைவான வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களைக் கொடுத்தல்
(இ) குறுகிய கால பத்திரங்களுக்குப் பதிலாக நீண்ட கால பத்திரங்களைத் தருதல்
(ஈ) மேற்கூறிய அனைத்தும்

70. பட்ஜெட் என்ற பதம் ஃபிரெஞ்ச் வார்த்தையாகிய (Bougette) விலிருந்து பெறப்பட்டது. அதன் பொருள்
(அ) சிறிய பை (ஆ) பெரிய பெட்டி (இ) காகிதங்கள் அடங்கிய பை (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

71. நிதிக்குழு நிர்ணயம் செய்வது எது?
(அ) இந்திய அரசின் நிதியினை (ஆ) நிதி வளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல்
(இ) பல்வேறு துறைகளுக்கு நிதியை மாற்றுதல் (ஈ) மேற்குறிப்பிட்ட எதுவுமில்லை

72. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது சரியான சொற்றொடர் எனக் கண்டுபிடி?
(1) ஜனாதிபதியால் நிதிக்குழு பணியமர்த்தப்படுகிறது (2) ஒரு நிதிக்குழுவின் காலம் 5 ஆண்டுகள்
(அ) 1 மட்டும் (ஆ) 2 மட்டும் (இ) இரண்டும் (ஈ) இரண்டும் இல்லை

73. GST இதற்கு சமம்
அ) விற்பனை வரி ஆ) தொழிற்குழும வரி இ) வருமான வரி ஈ) உள்ளாட்சி வரி

74. "என்வைரான்மென்ட்" என்ற வார்த்தை .......... என்ற பொருள் கொள்ளும் எந்த பிரெஞ்ச் வார்த்தையிலிருந்து தோன்றியது?
(அ) என்வைரான் (ஆ) என்வைரான்ஸ் (இ) என்வைரோனியா (ஈ) என்வைர்

75. "பொருள்சார் சமநிலை அணுகுமுறை"யை நிறுவியவர் யார்?
(அ) தாமஸ் மற்றும் பிக்கார்டி (ஆ) ஆலன்நீஸ் மற்றும் ஆர்.வி. அய்யர்ஸ்
(இ) ஜோன் ராபின்சன் மற்றும் ஜெ.எம்.கீன்ஸ் (ஈ) ஜோசப் ஸ்டிக்லிஸ் மற்றும் எட்வர்ட் சேம்பாலின்

76. சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை
(அ) சந்தைப் பொருட்கள் (ஆ) சந்தையிடாப் பொருட்கள் (இ) இரண்டும் (ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை.



CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

77. கார்பன் மோனாக்சைட் அதிகமாவதில் பங்களிப்பைச் செய்வது
(அ) மோட்டார் வாகனங்கள் (ஆ) தொழில் செயற்பாடுகள்
(இ) நிலையாக எரிபொருள் எரிக்கும் கருவிகள் (ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

78. உலக வெப்பமயமாதல் ......... என்றும் குறிப்பிடப்படுகிறது.
(அ) சூழலியல் மாறுபாடு (ஆ) பருவநிலை மாறுபாடு
(இ) வளிமண்டல மாறுபாடு (ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

79. சத்துக்களை அதிகப்படுத்தும் செயல் எப்படி அழைக்கப்படுகிறது?
(அ) யூட்ரோபிக்கேசன் (ஆ) சத்துக்களை கட்டுப்படுத்துதல் (இ) செறிவூட்டல் (ஈ) சிஸ்டோஸ்மியாசிஸ்

80. வன அழிவிற்கான முதன்மைக் காரணம் யாது?
(அ) மரம் வெட்டும் தொழில் (ஆ) இயற்கை வன அழிவு
(இ) நிலத்தை சமப்படுத்துதல் (ஈ) தட்பவெப்ப நிலை சமப்படுத்துதல்

81. நீடித்த வளர்ச்சி அல்லது வளங்குன்றா வளர்ச்சிக் குறிக்கோள்களை அடைய விதிக்கப்பட்டிருக்கும் காலம்
(அ) 2020 (ஆ) 2025 (இ) 2030 (ஈ) 2050

82. அமில மழைக் ............... விளைவுகளில் ஒன்று
அ) காற்று மாசு ஆ) நீர் மாசு இ) நில மாசு ஈ) ஒலி மாசு

83. பின்வருவனவற்றுள் பொருளாதார வளர்ச்சியின் தன்மை இல்லாதவை எது?
(அ) வளர்ந்த நாடுகளைப் பற்றியது (ஆ) படிப்படியான மாற்றம்
(இ) எண்களின் அடிப்படையில் அமைந்தது (ஈ) விரிவான கருத்து

84. கீழ்க்கண்டவற்றுள் எவை பின்தங்கிய நாடுகளின் பண்புகளில் ஒன்றாகும்?
(அ) வறுமையின் நச்சு சுழற்சி (ஆ) பெரும் நுகர்வை அதிகப்படுத்துதல்
(இ) தொழிற்சாலைகள் வளர்ச்சி (ஈ) அதிக அளவில் நகரமயமாதல்

85. பொருளாதார வளர்ச்சி .............ஐ அளவிடுகிறது.
(அ) உற்பத்தித் திறன் வளர்ச்சி (ஆ) பெயரளவு வருமான அதிகரிப்பு
(இ) உற்பத்தி அதிகரிப்பு (ஈ) இவை எதுவுமில்லை

86. கீழ்க்கண்ட திட்டங்களை அவை முன்மொழியப்பட்ட ஆண்டின் அடிப்படையில் காலக்கிரம வரிசைப்படி தொகுத்து விடையை தேர்ந்தெடுக்கவும்
(1) மக்கள் திட்டம் (2) பாம்பே திட்டம் (3) ஜவஹர்லால் நேரு திட்டம் (4) விஸ்வேசுவரய்யாத் திட்டம்
(அ) 1, 2, 3, 4 (ஆ) 4, 3, 2, 1 (இ) 1, 2, 4, 3 (ஈ) 2, 1, 4, 3

87. நீண்ட காலத்திட்டத்தின் மற்றொரு பெயர்
(அ) மேம்பாட்டுத் திட்டம் (ஆ) மேம்பாடு இல்லாத திட்டம்
(இ) முன்னோக்குத் திட்டம் (ஈ) முன்னோக்கமற்ற திட்டம்

88. சர்வோதயாத் திட்டத்தை முன்மொழிந்தவர் யார்?
(அ) மஹாத்மா காந்தி (ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன் (இ) எஸ். என். அகர்வால் (ஈ) எம். என். ராய்

89. இந்தியாவில் திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு .........
(அ) 1950 (ஆ) 1951 (இ) 1947 (ஈ) 1948

90. நிதி ஆயோக் கீழ்க்கண்ட எதன் மூலமாக அமைக்கப்பட்டது?
(அ) குடியரசுத் தலைவரின் அவசர ஆணை (ஆ) குடியரசுத் தலைவரின் சுற்றறிக்கை
(இ) அமைச்சரவைத் தீர்மானம் (ஈ) இவை எதுவுமில்லை

91. சுட்டிக் காட்டும் திட்டமிடலைச் செயல்படுத்திய நாடு

அ) பிரான்சு

ஆ) ஜெர்மனி

இ) இத்தாலி ஈ) இரஷ்யா

92. "ஸ்டாட்டிஸ்டிக்ஸ்" (Statistics) என்ற வார்த்தை ....... ஆகும்
(அ) ஒருமை (ஆ) பன்மை (இ) ஒருமை மற்றும் பன்மை (ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

93. புள்ளியியல், எண் விவரங்களைப் பற்றி படிக்கும் பயன்பாட்டுக் கணிதத்தின் ஒரு சிறப்புப் பகுதி என்று கூறியவர் யார்?
(அ) ஹோராஸ் செக்ரிஸ்ட் (ஆ) ஆர். ஏ. ஃபிஷர் (இ) யா-லன்-சூ (ஈ) போடிங்டன்

94. நேர்கோட்டு உறவினைக் கொண்டிருக்கும் இரு மாறிகளின் உறவின் அளவினை அளக்கும் முறைக்கு ................. பெயர்
(அ) சரிவு (ஆ) அச்சு வெட்டு (இ) உடன் தொடர்புக்கெழு (ஈ) ஒட்டுறவுச் சமன்பாடு

95. ஒரு சிதறல் விளக்கப்படத்தில் ஒரு மாறி அதிகரித்துச் செல்லும்பொழுது மற்றொரு மாறி குறைந்து சென்றால், உடன்தொடர்புக் கெழுவின் அளவு எவ்வாறாக இருக்கும்?
(அ) முழு நேர்மறையாக (ஆ) முழு எதிர்மறையாக (இ) எதிர்மறையாக (ஈ) 0

96. ஒட்டுறவு என்ற கருத்தினை முதலில் பயன்படுத்தியவர்
(அ) நியூட்டன் (ஆ) பியர்ஸன் (இ) ஸ்பியர்மேன் (ஈ) கால்டன்

97. பொருளாதார அளவையியல் என்பது எதன் இணைப்பு?
(அ) பொருளியல் மற்றும் புள்ளியியல் (ஆ) பொருளியல் மற்றும் கணிதம்
(இ) பொருளியல், கணிதம் மற்றும் புள்ளியியல் (ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

98. பொருளாதார அளவையியல் என்ற வார்த்தையை உருவாக்கியவர்
(அ) ஃபிரான்ஸி கால்டன் (ஆ) ராக்னா ஃபிரிஸ்க் (இ) கார்ல் பியர்சன் (ஈ) ஸ்பியர்மேன்

99. U என்பது .................
(அ) விலகல் (ஆ) திட்டப்பிழை (இ) பிழைக் கருத்து (ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

100. பொருளாதார அளவையியல் என்பது எத்தனை பாடங்களின் இணைப்பு?
அ) 3 பாடங்கள் ஆ) நான்கு பாடங்கள் இ) 2 பாடங்கள் ஈ) 5 பாடங்கள்



www.Padasalai.Net

CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com